9th August 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுக்க முடியும் என்று கூற முடியாது. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு தகுதியுள்ள பத்திரிகையாக இருந்தால் பார்த்து உதவி அளிக்கப்படும்.

நபி நாயகத்தின் படம்

* 248 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நபிகள் நாயகம் அவர்களின் படத்தை கல்கி பத்திரிக்கையில் வெளியிட்டிருப்பதைக் கண்டித்து அப்பத்திரிகையின்மீது நடவடிக்கை எடுக்கக்கோரி இலங்கையிலிருந்து O.M, கலிபா என்பவரிடமிருந்து சர்க்காருக்கு சமீபத்தில் ஏதேனும் முறையீடு வந்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) இது பற்றி விளக்கம் தருமாறு "கல்கி" ஆசிரியர் கேட்கப்பட்டார். முஸ்லீம் சகோதரர்களது மத உணர்ச்சிகளைப் புண்படுத்துவது நமது நோக்கமல்ல என்றும் கதையின் கருத்தை வலியுறுத்தவே பட விளக்கம் தரப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். படிப்பவர் உள்ளத்தில் நபிகள் நாயகத்தின் உயர்ந்த கொள்கைகளைப் பதிய வைக்கவேண்டும் என்ற உண்மையான நம்பிக்கையுடனும் உயர்ந்த எண்ணத்துடனும் அப்பட விளக்கம் வெளியிடப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மற்றும், இத்தகைய தவறு இனி நேராது என்றும் உறுதியளித்துள்ளார். ஆசிரியரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இது பற்றிய விஷயம் முடிவடைந்ததாகக் கருதப்பட்டது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : உருவமற்ற தெய்வத்தை வழிபடக்கூடிய இஸ்லாமிய சகோதரர்களுடைய உள்ளம் இந்தப் படத்தால் புண்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் கல்கி எடிட்டருக்குத் தகவல் தெரிவித்து அந்தப் பத்திரிகை இனிமேல் இத்தகைய படங்களை வெளியிடாது என்ற முறையில் பத்திரிகையில் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று கூற அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் தெரிவித்ததைத்தான் இங்கே தெரிவித்திருக்கிறேன்.

Deputy Inspectors of Schools

* 249 *Q.*—SRI M. S. SELVARAJAN :
SRI G. GOMATHISANKARA DIKSHITHAR : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of posts of School Assistants and Deputy Inspectors, Grade I, in the State;